www.tamilarangam.net

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

## அரசியல் தொடர்

எழுதுவது அற்புதன்

# ரஞ்சன் விஜயரத்தினாமீது புலிகள் நடத்திய தாக்குதல்!

ஏனைய இயக்கங்களில் இருந்து உறுப்பினர்களை இழுக்கும் வேலைகளை புலிகள் செய்வதில்லை என்று இத்தொடரில் குறிப்பிட்டிருந்தேன்.

இலண்டனிலுள்ள நண்பர் ஒருவர் பின்வருமாறு கேள்வி ஒன்றை எழுப்பியிருந்தார். ஈரோஸ் பாலகுமார், பரராஜசிங்கம் போன்றோர் புலிகளுடன்தானே உள்ளனர். அவர்கள் வேறு இயக்கத்தினர் இல்லையா? என்று கேட்டிருந்தார்.

ஈரோஸ் பாலகுமார் , பரராஜசிங்கம் உட்பட பலர் ஈரோஸ் இயக்கத்தை கலைத்துவிட்டுத்தான் புலிகள் அமைப்பில் இணைந்து கொண்டனர். ஈரோசைவிட்டு கட்சி மாறும் பட்சிகளாகச் செல்லவில்லை.

ஈரோஸ் கலைக்கப்பட்ட பின்னர் பலர் ஒதுங்கினார்கள். ஒரு பகுதியினர் புலிகளோடு இணைந்து கொண்டனர்.

இணைந்து கொண்டவர்களுக்கும் உடனடியாக பொறுப்புக்கள் தரப்படவில்லை. அவர்கள் நன்கு செயற்பட்டு இயக்க உறுப்பினர்களது நம்பிக்கையை பெற்ற பின்னரே பொறுப்புக்கள் தரப்பட்டன.

சக இயக்கங்களில் இருந்து உறுப்பினர்களை இழுப்பது, ஏனைய இயக்கங்களில் தவறு செய்து விட்டு வருபவர்களுக்கு புகலிடம் தந்து உறுப்பினராக்குவது, பொறுப்புக்கள் கொடுப்பது போன்ற நடவடிக்கைகளில் புலிகள் ஈடுபட்டதில்லை.

ஈரோஸ் அமைப்பு கலைக்கப்பட முன்னர் தம்பாப்பிள்ளை மகேஸ்வரன் தலைமையிலான தமிழீழ இராணுவம் கலைக்கப்பட்டது.

அந்த அமைப்பில் இருந்த உறுப்பினர்கள் விரும்பினால் தம்மோடு இணைந்து கொள்ளலாம் என்று கிட்டு கூறியிருந்தார்.

அதனை ஏற்று ஒருசாரார் புலிகளோடு இணைந்து கொண்டனர். அவ்வாறு இணைந்து கொண்டவர்களில் ஒருவர்தான் வரதன்.

தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் நன்கு தேர்ச்சி பெற்றிருந்தவர் வரதன்.

கொழும்பும் அவருக்கு நன்கு பரிச்சயமானது. தன்னை கொழும்பில் பணியாற்ற அனுமதிக்குமாறு வரதன் புலிகளின் தலைமைப்பீடத்திடம் கேட்டிருந்தார்.

வரதனின் திறமையை கணிப்பிட்ட பிரபாகரன் முக்கிய பொறுப்பு ஒன்றுடன் கொழும்புக்கு அவரை அனுப்பிவைத்தார்.

பாதுகாப்பு இராஜாங்க அமைச்சரான ரஞ்சன் விஜயரத்னாவை தீர்த்துக் கட்டுவதற்கான தாக்குதலுக்குரிய பொறுப்பே வரதனிடம் தரப்பட்டது.

தம்பாப்பிள்ளை மகேஸ்வரனுடன் இருந்தவர். அந்த இயக்கம் கலைக்கப்பட்டதால் ஒதுங்கி இருப்பவர் என்ற தோரணையில் கொழும்பில் தங்கியிருந்தார் வரதன்.

கொழும்பில் உள்ள பிரபலமான வீடியோ கொப்பிகள் வாடகைக்கு விடும் கடை ஒன்றில் வரதன் பணியாற்றினார்.

### தலைக்கு குறி

"பிரபாகரனின் தலையைக் கொண்டு வந்தால் பரிசு தரப்படும்" என்று பகிரங்கமாக அறிவித்தவர் ரஞ்சன்.

அவரது தலைக்கே குறிவைத்தனர் புலிகள். ரஞ்சனின் நடமாட்டங்கள் பலநாட்களாக கண்காணிக்கப்பட்டன.

ரஞ்சனின் இல்லம் திம்பிரிக்கஸாயாவில் இருந்தது. வீட்டிலிருந்து அநேகமாக தினமும் எட்டு மணியளவில் ரஞ்சன் புறப்பட்டு விடுவார்.

கொமாண்டோ வாகனப் பாதுகாப்புடன் வாகன அணியாக கூட்டுப்படை தலைமையகம் செல்வார்.

எப்போதுமே ஒரே பாதையைத்தான் ரஞ்சன் பயன்படுத்தி வந்தார்.

பாதைகளை மாற்றிச் செல்லலாம் என்று அவரது பாதுகாவலர்கள் கூறியதை ரஞ்சன் ஏற்கவில்லை.

தனக்குரிய பாதுகாப்பு ஏற்பாட்டைமீறி புலிகளால் தாக்குதல் நடத்த முடியாது என்று அவர் நினைத்தார்.

ரஞ்சனிடம்இயல்பாக இருந்த பிடிவாதமும், துணிச்சலும் இன்னொரு காரணம்.

தினமும் குறிப்பிட்ட பாதையிலேயே பயணம் செய்வதால் தாக்குதலுக்கு திட்டமிடுவது நினைத்ததைவிட இலகுவாக இருந்திருக்கிறது.

### இறுதி நாள்

1991 மார்ச் மாதம் 02ம் திகதி சனிக்கிழமை ரஞ்சன் விஜயரத்னாவுக்கு குறிவைக்கும் நாளாக தீர்மானிக்கப்பட்டது.

ஹவலொக் வீதியில் உள்ள பொலிஸ் பார்க் அருகே வெள்ளை ஹை எஸ் வேன் ஒன்று காத்திருந்தது.

அதற்குள் கரும்புலி ஒருவர் சாரதி ஆசனத்தில் அமர்ந்திருந்தார். ரஞ்சனுக்காக காத்திருந்தார்.

தனக்கு குறிவைக்கப்பட்டிருப்பது தெரியாமல், பளிச்சென்ற வெள்ளை உடையணிந்து, கம்பீரமாக நடந்து சென்று தன் காரில் ஏறிப் புறப்பட்டார் ரஞ்சன்.

கொமாண்டோ வாகனம் அவரது படகுபோன்ற நீளக் காரை பின்தொடர்ந்தது. காரின் முன்னால் போக்குவரத்து பொலிசாரும் போக்குவரத்தை ஓரமாக ஒதுக்கி வழி ஏற்படுத்தி கொடுத்தபடி சென்றனர்.

வெள்ளை ஹைஏஸ் வாகனத்தில் தயாராக இருக்கும் கரும்புலிக்கு வேன்



கண்ணாடி வழியாக தூரத்தில் வேகமாக வரும் வாகனத் தொடரணி தெரிகிறது.

அவர் வேன் எஞ்சினை உயிர்ப்பிக்கிறார்.



துரித வேகத்தில் வேனை நெருங்கிவருகிறது வாகன அணி.

இதோ வந்துவிட்டது.

வேனை சடுதியாக கிளப்பிய கரும்புலி, வாகன அணிக்கு அருகே, ரஞ்சனின் கார் அருகே வேனை கொண்டு சென்று சுவிட்சை காலால் அழுத்துகிறார்.

என்ன, ஏது என்று எவருமே சுதாரிக்க முடியாத கண்ணிமைக்கும் நேரத்தில்,

வேன் வெடிக்கிறது,

கூடவே ரஞ்சனின் காரும், பாதுகாப்புக்கு வந்த கொமாண்டோ வாகனங்களும் வெடித்துச் சிதறுகின்றன.

கொழும்பு நகர் அந்தச் சத்தத்தில் அதிருகிறது.

வெடிச்சத்தம் கேட்டபோது பழைய நேரப்படி காலை 8.25

வெடிவிபத்து ஏற்பட்ட இடத்தில் பாரிய அதிர்வுகள். அருகிலுள்ள கட்டடங்களில் கண்ணாடிகள் வெடித்து உதிர்ந்தன.

போக்குவரத்து அதிகமான நேரம் என்பதால் பொது மக்கள் 25 பேர் வரை பலியானார்கள். 77 பேர் காயமடைந்தனர்.

ரஞ்சனின் உடல் அடையாளம் தெரியாதளவு சிதறிப்போனது.

எங்கும் மனித உடல் பகுதிகள் சிதறுண்டு கிடந்தன.

### ரிமோட்கொன்ரோல்

முதல் முறையாக கொழும்பில் நடந்த மனிதக் குண்டு தாக்குதல் அதுதான்.

மனித இலக்கை குறிவைத்து புலிகள் நடத்திய முதலாவது மனிதக் குண்டுத் தாக்குதலும் அதுதான்.

அதனால் தாக்குதல் எவ்வாறு நடந்தது என்பதை ஊகிக்க முன்பே அப்பகுதியில் கிடந்த மனித அவயவங்களையும் அகற்றிவிட்டனர்.

வாகனம் ஒன்றை முன்கூட்டியே நிறுத்தி வைத்து ரிமோட் கொன்ரோல் மூலம் வெடிக்க வைத்திருக்கலாம் என்றே பொலிசார் சந்தேகித்தனர்.

வெள்ளை ஹைஏஸ் வாகனத்தின் உதிரிப் பாகங்களை வைத்து அதன் உரிமையாளர் யார் என்பதைக்கூட கண்டுபிடிக்க முடியவில்லை.

இத்தகைய தாக்குதலை கையாளும் அனுபவம் அப்போது இருக்கவில்லை.

ராஜீவ் காந்தி கொலைக்கு பின்னர் தமிழக சிறப்பு புலனாய்வு குழு கையாண்ட அணுகுமுறைகளே பின்னர் இங்கும் பயன்படுத்தப்பட்டன.

பலியான உடல்களுக்குள் கரும்புலி உடலை தேடுவது, அவயவங்களை இணைத்துப் பார்ப்பது போன்ற நடைமுறைகள் ராஜீவ் கொலைக்கு பின்னரே இங்கும் பரிசீலிக்கப்பட்டன.

ரஞ்சன் மீதான தாக்குதலில் நேரடியாக ஈடுபட்ட கரும்புலியின் பெயரை புலிகள் வெளியிடவில்லை.

முகம் தெரியாத கரும்புலிகள் என்ற பட்டியலில் அவரது பெயரும் இணைந்து கொண்டது.

ரஞ்சன்மீதான தாக்குதலின் தளப் பொறுப்பை ஏற்றிருந்தவர் வரதன்.

### சந்தேகம்

ரஞ்சன் விஜயரத்னா கொலைக்கு ஜனாதிபதி பிரேமதாசா காரணமாக இருக்கலாம் என்று வதந்திகள் உலாவின.

எதிர்க்கட்சி வட்டாரங்களும் அதனை ஊக்குவித்தன.

கசினோ சூதாட்டக்காரர் ஒருவரை ரஞ்சன் நாட்டைவிட்டு வெளியேற்றினார்.

அந்த சூதாட்டக்காரருக்கு பிரேமதாசாவின் துணைவியார் ஹேமாவுடன் அறிமுகம் இருந்தது.


முக்கிய அமைச்சர்களுடனும் சூதாட்டப் புள்ளிக்கு தொடர்புகள் இருந்தன. அவர்கள் எவருடனும் தொலைபேசியூடாக தொடர்பு கொள்ளக்கூட அவருக்கு அனுமதி தரப்படவில்லை.

தானே விமான நிலையம் சென்று அந்த கசினோ ஆசாமியை வெளியேற்றிவிட்டுத்தான் ஒய்ந்தார் ரஞ்சன்.

அதுமட்டுமல்ல தன் கட்சிக்காரர்கள் தப்பு செய்தால்கூட பொலிசாரை நடவடிக்கை எடுக்குமாறு கூறிவிடுவார்.

அப்போது உதவி சபாநாயகராக இருந்த காமினி பொன்சேகா வீட்டில் பொலிசார் சோதனை நடத்தினர்.

பாராளுமன்றம்வரை காமினி பிரச்சனை



யைக் கொண்டு சென்றார். தனது கட்சியில் முக்கிய நபர் என்றும் சார்பு காட்டாது பொலிசாரின் நடவடிக்கையை ஆதரித்து ரஞ்சன் வாதிட்டார்.

அவரது தனிப்பட்ட நேர்மையை எதிர்க்கட்சிகள்கூட குறைகூறமுடியாத அளவுக்கு இருந்தது என்பது உண்மை.

ரஞ்சனுக்கு அவரது கட்சியினர் இரகசிய மாக ஒரு பட்டம் சூட்டியிருந்தனர். 'விசர்ப் பூனை' என்பதுதான் அந்தப் பட்டம்.

இத்தகைய காரணங்களால் ரஞ்சன் கொலைக்கு பிரேமதாசாமீதே பழிபோடப்பட்டது.

புலிகளும் இத் தாக்குதலுக்கு உரிமை கோரவில்லை.

ரஞ்சன் பலியானபோது 59 வயது. மார்ச் 2இல் ரஞ்சன் பலியானார். ஏப்ரல் 04ம் திகதி அவரது 60வது பிறந்தநாள்.

### ஒருமுறை தவறியது

மார்ச் 02ம் திகதி தாக்குதல் நடத்துவதற்கு முன்னரும் ஒரு தடவை ரஞ்சனின் வாகனத் தொடர்மீது தாக்குதல் நடத்த சந்தர்ப்பம் கிடைத்தது. ஆனால் நடத்தவில்லை.

குறிப்பிட்ட வாகனத்தில் தளப் பொறுப்பாளரான வரதனும் இருந்திருக்கிறார்.

அவர் வாகனத்தைவிட்டு இறங்க முன்னரே ரஞ்சனின் வாகனத் தொடரணி குறிப்பிட்ட நேரத்திற்கு முன்பே வந்துவிட்டது.

அதனை அவதானித்த வரதன் சுவிட்சை அழுத்துமாறு கரும்புலியிடம் கூறியிருக்கிறார்.

ஒரு ஆள் செய்யவேண்டிய காரியத்திற்கு மேலதிகமாக இன்னொருவரை, அதுவும் தளப் பொறுப்பாளரையே பலி கொடுப்பதா? என்று நினைத்த கரும்புலி சுவிட்சை அழுத்த மறுத்து விட்டார்.

அதனால் அன்று ரஞ்சனின் தொடரணி தாக்குதலில் இருந்து தப்பியது.

(தொடர்ந்து வரும்)

# அன்றும் இன்றும்

தமிழர் விடுதலைக் கூட்டணியின் மனச்சாட்சி என்று வர்ணிக்கப்பட்ட பத்திரிகை 'சுதந்திரன்'.

6.04.1975ல் சுதந்திரன் பத்திரிகை வெளியிட்ட காரசாரமான ஆசிரியர் தலையங்கம் இது.

இன்றுள்ளதைவிட அன்று ஆயிரம் மடங்கு பரவாயில்லாத சூழல். அவ்வாறிருந்தும் என்னவிதமாக கொதித்தும் குமுறியும் தலையங்கம் தீட்டப்பட்டுள்ளது பாருங்கள்:

சபாஷ்! சிறிமாவோ பண்டாரநாயகா அவர்களே! சபாஷ்!

அனைத்துலக பாராளுமன்ற ஒன்றியத்தின் மாநாட்டின் தொடக்கத்தின்போது நீங்கள் ஆற்றிய உரைக்குத்தான் சபாஷ்போடுகிறோம்!

ஏனெனில் உங்களைப் போல வேறு யாராலும் உள்ளத்தில் ஒன்றும் உதட்டில் ஒன்றுமாக இப்படி கச்சிதமாகப் பேசியிருக்கவே முடியாது!

உங்களைப்போல இப்படி வேறுயாராலும் உருத்திராட்சப் பூனைபோல வேடம் போட்டு நடித்திருக்கவே முடியாது!

உதட்டளவில் ஊருக்கு உபதேசம் செய்வதற்கு உங்களைவிட வேறுயாராலுமே முடியாது!

முழுப் பூசணிக்காயை கனகச்சிதமாக பிடிசோற்றில் மறைத்துக்கொண்டு- உலகப் பிரச்சனைகளைப்பற்றி பேசுவதில் உங்களுடன் வேறுயாராலும் போட்டியிடவே முடியாது!

அம்மையாரே! அம்மையாரே! காலனியாதிக்கத்தையும், சுரண்டலையும் எதிர்த்து கனகச்சிதமாக மாநாட்டு மேடையில் முழங்கியிருக்கிறீர்கள்!

ஆனால் நடைமுறையில் இங்கு என்ன செய்கிறீர்கள் என்பதை உங்கள் உள்ளத்தை தட்டிக்கேளுங்கள்! நீங்கள் வணங்கும் புத்தபகவான் மீது ஆணையாக உங்கள் மனச்சாட்சியைத் தட்டிக்கேளுங்கள்!

தமிழ் தேசிய இனத்தின் சம்மதத்தை துளியும்பெறாத- தமிழ் தேசிய இனத்தினால் முற்றாக நிராகரிக்கப்பட்டுவிட்ட -உங்கள் புதிய தனிச்சிங்கள பௌத்த ஏகாதிபத்திய குடியரசு அரசியல் சட்டத்தை தமிழ் மக்கள்மீது பலவந்தமாக திணித்து தமிழினத்தையும், தமிழ் ஈழத்தையும் அடக்கியொடுக்கி ஆட்சி நடத்த முயற்சிக்கிறீர்கள்!

தமிழ்பேசும் மக்களின் சொந்தத் தாயகமாக விளங்குவதும்- தமிழினம் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே தனியாட்சி நடத்தி வந்ததுமான தமிழ் ஈழத்தில்-உங்கள் பௌத்த சிங்கள ஏகாதிபத்தியத்தை திணித்து-அதை ஒரு புதிய காலனி நாடாக வைத்துக் கொண்டிருக்கிறீர்கள்!

தமிழ் ஈழத்தில் ஆயுதப்படைகளை பெருந்தொகையாகக் குவித்து-அதை ஒரு ஆக்கிரமிக்கப்பட்ட நாடு போல அடிமைப்படுத்த நினைக்கிறீர்கள்!

தமிழ் ஈழத்தின் நிர்வாகத்தை கவனிப்பதற்கு ஒவ்வொரு மாவட்டத்துக்கும் நீங்கள் அனுப்பும் உயர்தர மேல்மட்ட அரசாங்க அதிகாரிகள்-பொலிஸ் அதிகாரிகள்-அனைவரையும் தனிச் சிங்களவர்களாக அனுப்பிவைத்து-தமிழ் ஈழத்தை சிங்கள பௌத்த ஏகாதிபத்தியத்தின் ஒரு காலனியாக உறுதிப்படுத்தி வருகிறீர்கள்!

தமிழ் ஈழத்தின் விவசாய நிலங்களில் சிங்களவர்களை திட்டமிட்டு குடியேற்றி தமிழர் நிலத்தை-அவர்களின் பூர்வீகச் சொத்தை-ஆக்கிரமிக்கிறீர்கள்! புதிய சுரண்டல் கொள்கையை கச்சிதமாக கடைப்பிடிக்கிறீர்கள்!

தமிழர் நிலம் பறிக்கப்படுகிறது; வேலை வாய்ப்புக்கள் பறிக்கப்படுகின்றன; மீன் பிடி, விவசாயம், கைத்தொழில் போன்றவற்றிலும் சிங்கள ஆதிக்கம் தலையெடுக்கிறது; தமிழர் தாயகமாம் வடக்கு கிழக்கு மாகாணங்கள்- அதாவது தமிழ் ஈழம்- சுரண்டப்படுகிறது!

தமிழ் ஈழத்திலுள்ள மன்னாரில் எண்ணெய் வள ஆராய்ச்சிக்குக்கூட தெற்கிலிருந்து 500 சிங்களவர்களைக் கொண்டுவந்து குவித்து, தமிழ் ஈழ மக்களின் வேலை வாய்ப்புக்களை சுரண்டுகிறீர்கள்!

இவ்வாறு பல்வேறு வழிகளிலும் தமிழ் ஈழத்தை புதிய 'காலனியாக' அடிமைப்படுத்திக் கொண்டு-தமிழ் இனத்தைச் சுரண்டிக் கொண்டுதான், சுரண்டல் கொள்கையையும், காலனி ஆதிக்கத்தையும் எதிர்த்து மாநாட்டில் பிரமாதமாக முழங்கித் தள்ளியிருக்கிறீர்கள்!

ஆனால் இந்த நாட்டில் தமிழ் மக்களின் கலாசாரத்தை-அக்கலாசாரத்தின் மூலவித்தான தமிழ் மொழியை- ஒழித்துக் கட்ட உங்கள் ஆட்சி எடுத்து வரும் நடவடிக்கைகள் உலகத்துக்கு தெரியாதா என்ன?

கடந்த 1974ம் ஆண்டு தை மாதம் 10ம் நாள் நடைபெற்ற நான்காவது அனைத்துலகத் தமிழ் கலாசார மாநாட்டில்-வெளிநாட்டுப் பிரதிநிதிகளும் கலந்து கொண்ட அந்த மாநாட்டில்- உங்கள் ஆட்சியின் வெறி பிடித்த பொலிஸ்படை புகுந்து வெளிநாட்டு அறிஞர்களையும் பெண்களையும் குழந்தைகளையும் மிருகத்தனமாகத் தாக்கி பத்துப்பேரை படுகொலை செய்ததை உலகம் அதற்குள் மறந்தாவிட்டது? தமிழ் மக்களின் கலாசார அபிலாஷைகளுக்கு நீங்கள் தந்த "உரிய இடம்" இது தானே!

"காலனி ஆதிக்கத்தினால் ஏற்பட்ட தடைகள் நீக்கப்படவேண்டும்" என்றும் கூறியிருக்கிறீர்கள்!

இதை ஏற்றுக்கொள்ளுகிறோம்- இந்த அடிப்படையில்தான், தமிழ் ஈழத்தேசிய இனம் அந்நிய காலனித்துவ ஆட்சிகளினால் அடிமைப் படுத்தப்பட்டிருந்த தங்கள் தமிழ் ஈழநாட்டை விடுவிப்பதற்கு இப்பொழுது உறுதி பூண்டுள்ளனர்!

வெளிநாட்டு ஆதிக்கம் அகன்ற பின்னரும்- தமிழ் ஈழத்தில் புதிய அந்நிய பௌத்த சிங்கள ஏகாதிபத்தியம் திணிக்கப்படுவதை - தமிழ் ஈழம் மீண்டும் புதியதோர் காலனி நாடாக்கப்படும் ஆபத்தை தமிழ் இனம் வலிவுடன் எதிர்த்து நிற்கின்றது!

தமிழ் ஈழத்தை-பௌத்த சிங்கள ஏகாதிபத்தியத்தின் சுரண்டலிலிருந்தும் புதிய காலனித்துவ ஆதிக்கப்பிடியிலிருந்தும் விடுவித்து- தங்கள் கலாசார அபிலாஷைகளை நிறைவேற்றிக்கொள்ளவே தமிழ் ஈழத்தேசிய இனம் இன்று உறுதிபூண்டுள்ளது!

இதை அம்மையாருக்கும் வெளிநாட்டுப் பிரதிநிதிகளுக்கும் கூறி வைக்கிறோம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்